Literacy for a Billion

Movie: Natchathiram
Year: 1980

Song: Aval oru managai
Lyricist:

கரும்புகள் தேன்மொழி
அரும்புகள் புன்னகை
கரும்புகள் தேன்மொழி
அரும்புகள் புன்னகை
என் கனவிலும் ஆடிடும்
அவளின் கலை
மனம் நினைக்கின்றது
சுகம் பிறக்கின்றது
மனம் நினைக்கின்றது
சுகம் பிறக்கின்றது
அவள் போல் இங்கே
எவரும் இல்லை
அவள் ஒரு மேனகை
என் அபிமான தாரகை
அவள் ஒரு மேனகை

ஆடிய பாதம்
ஆயிரம் வேதம்
அவளது நாதம்
தமிழ் சங்க கீதம்
ஆடிய பாதம்
ஆயிரம் வேதம்
அவளது நாதம்
தமிழ் சங்க கீதம்
பார்வையில் குளிரும்
மார்கழி மாதம்
பார்வையில் குளிரும்
மார்கழி மாதம்

அதிகாலையில் வரும்
பூபாள ராகம்
சிவரஞ்சனி சிவரஞ்சனி
அவள் சங்கீத பாவம்
கங்கையின் தேகம்
தாமரைப்பூவின்
சூரிய தாகம்
காலமே அவள் விழிகள்
சொன்னபடி ஆடுமே

தாளமே அவள் கால்கள்
கேட்டபடி தாவுமே
மொழியோ ஆலய சங்கொ
இடையோ அசைந்திடும்
கிண்கிணி
என்ன சொல் என்ன பாட
கம்பன் இல்லை கவிதை பாட
என்ன சொல் என்ன பாட
கம்பன் இல்லை கவிதை பாட
ஆ.....ஆ....
அவள் தஞ்சை தரணியில்
கொஞ்சும் அழகிய
கோவில் அன்றோ
நான் அவள் பக்தனன்றோ
அவள் ஒரு மேனகை
என் அபிமான தாரகை
அவள் ஒரு மேனகை
சிவரஞ்சனி சிவரஞ்சனி

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*